**முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

2025ம் ஆண்டு டிசம்பர் மாதம் 01–ம் தேதி வாதி தரப்பு சாட்சி வா.சா.2–ன் வாக்குமூலம் 1989ம்ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படிதிரு.G.அசோக்பிரசாத் B.A.B.L., M.S.E.N., ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

(வாதி ஆஜர் . 1 முதல் 3 பிரதிவாதிகள் ஆஜர் இல்லை. வாதி மற்றும் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்)

அ.வ.எண்.1128/2022

வா.சா.2 பழனிசாமி த/பெ ரங்கசாமி

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்குவிசாரணை தொடர்ச்சி:–**

1. எனக்கு நீதிமன்றத்தில் இருந்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை எதுவும் வரவில்லை என்றால் சரிதான். வாதி அழைத்ததன் பெயரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். என்னுடைய முகவரியை காட்டுவதற்கு ஆதார்கார்டு தாக்கல் செய்துள்ளேன். விவசாயம் செய்து வருகிறேன். மேற்படி விவசாய நிலம் நடுபாளையத்தில் அமைந்துள்ளது. ஈரோட்டில் வாடகை வீட்டில் இருந்து வருகிறேன்.

2. வீட்டின் உரிமையளார் பெயர் தெரியாது ஆனால் இன்ஜினியர்க்கு சொந்தமானது. பொன்னுசாமி எனக்கு உறவினர் அல்ல. நானும், பொன்னுசாமியும் கடந்த 35 வருடங்கள் நண்பர்கள் ஆவோம். பொன்னுசாமி கார் ஓட்டுனராக வேலை பார்த்து வருகிறார். பொன்னுசாமியின் குடியிருக்கும் வீட்டின் கதவு எண்.8., நான் குடியிருக்கும் வீட்டின் கதவு எண்.8/1 ஆகும். 1ம் பிரதிவாதி சதாசிவத்திற்கு சொந்த ஊர் எது என்று தெரியாது. தற்போது அவர் எங்கு குடியிருக்கிறார் என்று தெரியாது.

3. 2ம் பிரதிவாதி லோகநாதன் சொந்த ஊர் எது என்று தெரியாது. அவர் எங்கு குடியிருக்கிறார் என்று தெரியாது. 1,2 பிரதிவாதிகளை நான் பார்த்தது இல்லை வழக்கிற்காக 1,2 பிரதிவாதிகளை தெரியும் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. சதாசிவத்திற்கு எங்கு சொத்துக்கள் உள்ளது என்று எனக்கு தெரியாது.

4. சதாசிவம் கந்துவட்டி தொழில் எதுவும் செய்யவில்லை வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. கந்துவட்டி தொழில் செய்து வருகிறார் என்பதற்கு என்னிடம் ஆவணங்கள் எதுவும் இல்லை. கந்துவட்டி

தொழில் செய்து வருகிறார் என்பதற்கு வழக்குகள் எதுவும் அவர் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் அவ்வாறு எதுவும் பதிவு செய்யவில்லை.

5. பொன்னுசாமி தாவா சொத்து சம்மந்தமாக கிரைய பத்திரத்தை நான் படித்து பார்த்துள்ளேன். பொன்னுசாமி தாவா சொத்தை எப்போது கிரையம் பெற்றார் என்ற விவரம் எனக்கு தெரியாது. மேலும் தாவா சொத்தை யாரிடம் கிரையம் பெற்றார் என்ற விவரம் எனக்கு தெரியாது. பொன்னுசாமி சதாசிவத்திடம் ரூ.1,00,000/- கடன் எதுவும் வாங்கவில்லை வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

6.சதாசிவம் தாவா சொத்தை பொறுத்து எழுதிக் கொடுத்த ஒப்பந்த தேதி எனக்கு தெரியாது. அதில் நான் சாட்சி கையொப்பமிடவில்லை. பவர் பத்திரம் பொன்னுசாமி எந்த தேதியில் எழுதிக் கொடுத்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது. அந்த பவர் பத்திரத்திலும் நான் சாட்சி கையொப்பமிடவில்லை. பொன்னுசாமி சதாசிவத்திடம் கடன் எதுவும் பெறவில்லை, அதை போல் சதாசிவம் மாதம், மாதம் பொன்னுசாமியிடம் வட்டி வசூல் செய்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

7. கடன் வாங்கினால் பொதுவாக கடன் உறுதி சீட்டு அல்லது அடமான பத்திரம் எழுதிக் கொடுப்பார்கள் என்றால் சரிதான். நான் சொல்லுவது போல் கடனுக்காக ஒப்பந்தமோ, பவர் பத்திரமோ எழுதிக் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தை விற்பனை செய்தவற்காகதான் கிரைய ஒப்பந்தமும், பவர் பத்திரமும் பொன்னுசாமியால் எழுதி கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல.

8. நான் தாக்கல் செய்துள்ள பிரமாணவாக்குமூலம் பொன்னுசாமியால் தயார் செய்து கொடுக்கப்பட்டது என்றால் சாட்சி வாக்குமூலம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. சாட்சி வாக்குமூலத்தில் என்ன விவரம் எழுதி உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது. ஆனால் கையொப்பம் போட சொன்னார்கள் போட்டேன். 2005ல் வட்டி கேட்டு சதாசிவம் பிரச்சனை செய்ததாக அது சம்மந்தமாக போலீஸ்சாரிடம் புகார் கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை.

9. 2005ல் எந்த தேதியில் கடன் திருப்பி செலுத்தப்பட்டது என்பது எனக்கு ஞாபகம் இல்லை. உறவினர்கள் யார் என்பதை என்னுடைய சாட்சி வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் சதாசிவம் கிரைய பத்திரத்தையும், பவர் பத்திரத்தையும் ரத்து செய்வதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.10. 3ம் பிரதிவாதி

செல்வி பெயரில் ஏற்பட்ட கிரைய பத்திரத்தை நான் பார்க்கவில்லை. தாவா சொத்து 3ம் பிரதிவாதி அனுபவத்தில் உள்ளது என்றால் சரியல்ல. வாதியிடம் தான் சுவாதீனம் உள்ளது. நான் ஆவணங்களை சுவாதீனம் சம்மந்தமாக பார்த்தேனா என்றால் பார்த்தேன். சதாசிவம், லோகநாதனை வைத்து செல்வி பெயருக்கு கிரைய பத்திரம் ஏற்படுத்தி, ஏமாற்றியதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

11. தாவா சொத்து சுவாதீனம் 1ம் பிரதிாதியிடம் தான் உள்ளது, பொன்னுசாமியிடம் சுவாதீனம் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தின் சர்வே எண் மற்றும் நான்கு எல்லைகள் எதுவும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். கிரைய ஒப்பந்தத்தையும் பவர் பத்திரத்தையும் படித்து பார்த்தேன், அதில் கடனுக்கு ஆதரவாக மேற்கண்ட ஆவணங்கள் எழுதிக் கொடுக்கப்பட்டது என்ற வாசகங்கள் தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.2 மற்றும் வா.சா.3ல் உள்ளதாக என்றால் இல்லை.

12. பொன்னுசாமி தாவா சொத்தை திரும்ப பெறுவதற்கு தாக்கல் செய்துள்ளார். 3ம் பிரதிவாதி தகுந்த கிரைய தொகை செலுத்தி கிரையம் பெற்றுள்ளார் அவர் தாவா சொத்தில் சுவாதீனத்தில் இருந்து வருகிறார் என்றால் சரியல்ல. பொன்னுசாமி எனக்கு நண்பர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை:–இல்லை